உணர்ந்து செயல்பட்டது. தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு உதவிகள் அளிக்கப்பட்டன.

வட்டார சமவளர்ச்சியின் முக்கியத்துவம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உணரப்பட்டது. கச்சாப் பொருட்களும் பிற சாதனங்களும் கிடைக்குமிடம் தொழில் இடவமைவுக்கு முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எடுத்துக் கொள்ளாத தொழில்கள் பிற இடங்களில் அமைய வழிவகை செய்யப்பட்டது. தொழில் நடவடிக்கையை பரவலாக்குவதன் முக்கியத்துவத்தை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும் வலியுறுத்தப்பட்டது.

தொழில் சட்டம்-1951 அரசு தொழில் உரிமங்களை வழங்கும்போது பின்தங்கிய பகுதிகள் அதற்குரிய சலுகைகளை பெறுகின்றனவா? என்பதைக் கவனிக்க வேண்டும் என்று கூறுகின்றது. பின்தங்கியப் பகுதிகளில் தொழில்கள் ஆரம்பிப்பதற்கு அரசு நிதி உதவிகளை அளிக்கின்றது: குறைந்த வட்டிவீதம், ஊக்கத்தொகை ஆகிய வகையில் நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

**அரசு அளிக்கும் சலுகைகள்:** (Concession issued by government) சில இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க மத்திய அரசும் மாநில அரசும் சலுகைகள் அளிக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளரவும் வட்டார சம வளர்ச்சி அடைவதும் ஆகும். மத்திய மாநில அரசுகள் தொழில் ஒரே இடத்தில் குவிந்திருப்பதை ஊக்குவிப்பதில்லை. அரசு பின்வரும் சலுகைகளைத் தருகின்றது.

1. தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு குறைந்த வாடகையில் தொழிற்சாலைக்கு இடமளிக்கப்படுகின்றது.
2. தொழிற்சாலைக்கான இடம் குறைந்த விலையில் வரிச்சலுகைகளுடன் அளிக்கப்படுகின்றது.
3. தொழிற்சாலைக்கான இடம் குறைந்த விலையில் சலுகை கட்டணத்தில் அளிக்கப்படுகின்றது.
4. தொழிலுக்கு தொழில் நிதி உதவி நிறுவனங்கள் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகின்றன.
5. சில தொழில்களுக்கான கச்சாப் பொருட்கள் அரசால் வழங்கப்படுகின்றன.
6. தொழிலாளர்கள் தொழில் பயிற்சிப் பெற உதவி அளிக்கப்படுகிறது.
7. உற்பத்தி செய்தப் பொருட்களை விற்பனை செய்ய விற்பனைக் கூடங்கள் நிறுவ உதவுகின்றது.



8. தொழில் பிரச்சினை ஏற்படுவதை சமாளிக்க உதவுகின்றது.
9. பலவித ஆராய்ச்சிகள் நடத்தி, தொழில் முயல்வோருக்கு வழிகாட்டுகின்றது.

தொழில் முயல்வோர் ஓரிடத்தில் தொழில் தொடங்குவதற்கு முன்னர் கிடைக்கும் சலுகைகளை கவனத்தில் கொள்ளவேண்டும். மொத்தத்தில் அரசு தொழிலைப் பரவலாக்குதலை தனது கொள்கையாகக் கொண்டிருக்கின்றது.

5. வட்டார ஏற்றத் தாழ்வுகளை சுட்டிக்காட்டுபவை யாவை?

## வட்டார ஏற்றத்தாழ்வுகள்: (Regional Imbalances)

ஒரு நாட்டில் உள்ள வட்டாரங்களுக்கிடையே அல்லது பகுதிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வு நிலவுவது பொதுவான தன்மையாகும். வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் ஒரு சில பகுதிகள் தொழில் வளர்ச்சி பெற்று இருக்கின்றன. பிற பகுதிகள் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய நிலையில் உள்ளன. வளர்ந்து வரும் நாடுகளில் இவ்வகையான ஏற்றத்தாழ்வு அதிகம் காணப்படுகின்றது. பெரும்பாலான தொழிற்சாலைகள் ஒரு சில வளர்ச்சிப் பெற்ற மாநிலங்களில் குவிந்துக் காணப்படுகின்றன. குறிப்பாக தலைநகரங்களில் (Metropoliton Cities) அதிகம் காணப்படுகின்றன. இதனால் ஒரு நாட்டிலுள்ள வட்டாரங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. எனவே வளர்கின்ற நாடுகளில் நிலவும் வட்டார ஏற்றத்தாழ்வு பிரச்சினை பொருளாதார அறிஞர்கள், திட்டமிடுவோர் மற்றும் நிர்வாகிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## இந்திய வட்டார ஏற்றத்தாழ்வுகளுக்கான குறியீடுகள்:(Indicators of Regional Imbalance in India)

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிற்மயமாக்கல் முக்கியம் என்பது சுதந்திரத்திற்கு பிறகு உணரப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுது தொழில் வளர்ச்சி குறைவாக இருந்தது. அத்துடன் தொழிற்சாலை அமைந்த இடங்களில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டன. ஏறத்தாழ 74% தொழிற்சாலைகள் மூன்று பெரிய நகரங்களான கல்கத்தா, பம்பாய் மற்றும் சென்னையில் அமைந்திருந்தன.

சுதந்திரம் அடைந்தபிறகு இந்தியாவின் பல இடங்களிலும் இரும்பு, எஃகு ஆலைகள், பெட்ரோலிய, இரசாயன ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இவைகளும் பெரிய நகரங்களை ஒட்டியே நிறுவப்பட்டன. இதனால் தொழிற்சாலை அமைந்துள்ள இடங்களில் பெரிய மாறுதல்கள் ஏதும் ஏற்படவில்லை.

Scanned with CamScanner